# கிருஷ்ணகிரியில் ஸி. எஸ். அமோக வெற்றி!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49 | தேசிய தினசரி | மலர் 13
டெலிபோன் 389 | | இதழ் 192

யாழ்ப்பாணம் ஆவணி 8 ரஜப் 2 செவ்வாய்க்கிழமை (24-8-71)

## எதிர்த்தவர் ஜாமீனை இழந்தார்

சென்னை ஆகஸ்ட் 23 பாரத திட்ட அமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி லோகசபைத் தேர்தல் தொகுதியில் நடைபெற்ற உபதேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளார். இவருடன் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர் திரு. ஓ ஏ வரததேசிகர் கட்டுப்பணத்தை இழந்தார்.

பாராளுமன்றத்திற்கு உறுப்பினராக தெரிவு செய்யப்பட வேண்டுமென்பதற்காக கிருஷ்ணகிரி தொகுதியின் லோகசபை உறுப்பினராக இருந்தவர் தமது பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து இவ் உபதேர்தல் நேற்று நடைபெற்றது. இதன் முடிவு இன்று மாலை அறிவிக்கப்பட்டது.

திரு சுப்பிரமணியத்துக்கு 1 லட்சத்து 89 ஆயிரத்து 951 வாக்குகளும், திரு வரததேசிகருக்கு 19,286 வாக்குகளும் கிடைத்தன. திரு வரததேசிகர் ஜாமீன் தொகையை இழந்தார்

# மோதிரம், சங்கிலி, பணம் நல்லூரில் தொலைத்தீர்களா?

## கவலைவேண்டாம்; நல்லூர் பொலிசில் அவைஇருக்கின்றன

யாழ்ப்பாணம், செவ்வாய் [illegible] விப்பாந்தசரம், பெண்கள் அணியும் வைக்கடிவாரம், ரொக்கப்பணம் இப்படிப் பத்தெரு வகையான பொருள்களை நல்லூர்த் திருவிழாவுக்குச் சென்றவர்கள் தொலைத்திருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. தொலைத்த பொருள்களைப் பொலிசார் பத்திரமாக வைத்திருக்கிறார்கள். நல்லூர்ப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தொலைத்த பொருள்கள் தங்களுடையவை தான் என்று தகுந்த அத்தாட்சி காட்டினால் அந்தப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வைலேஞ்சி, பவுண்டன் பேனா, பெண்கள் பணம் வைக்கும் கைப்பை, வெள்ளிச்சங்கிலி ஆகிய பொருள்களும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன

### திருட்டு இல்லை

நல்லூர்த் திருவிழாக் காலத்திலும் இம்முறை திருட்டுச் சம்பவமோ ஜேப்படி சம்பவமோ எதுவும் நடைபெறவில்லையென்று வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம் பெருமையோடு கூறுகிறார். சென்ற வருடங்களை விட இம்முறை நல்லூருக்கு வந்த மக்களின் தொகை அதிகம் என்றும், அங்கப் பிரதட்சணம் செய்தவர்களின் எண்ணிக்கையும் இம்முறை அதிகம் என்றும் பொலிசார் கணித்துள்ளனர். நாகரிக அலங்காரப் பிரியர்கள் இம்முறை குறைந்து நல்ல ஒழுங்கான கூட்டம் இம்முறை அதிகமென்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

நல்லூர்த் திருவிழாக்காலத்தில் அன்று கடமையாற்றிய பொலிசாரையுங் குறிப்

(6-ம் பக்கம் பார்க்க)

## "நல்லூரைப் புனிதநகராக்க அரசு உதவவேண்டும்"

யாழ். உதவி மேயர்

யாழ்ப்பாணம், செவ். [illegible] களின் புராதன புனிதஸ்தலங்களில் எற்பொழுது சிறப்புப்பெற்று மக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் ஆலயங்களில் நல்லூர்க்கந்தன் ஆலயமும் ஒன்றாகும். உற்சவகாலத்தில் மட்டுமன்றி எல்லாக் காலத்திலும் நல்லூரில் தினமும் பக்தர் கூட்டங்களை நாம் காண்கின்றோம். இத்திருவிழா நிகழ்ச்சிகளை நேரில் காணமுடியாத மக்கள் தங்கள் இல்லங்களில் இருந்து கந்தன் தேர் தீர்த்த நிகழ்ச்சிகளை கேட்டு பக்தி பரவசத்தில் திளைக்கும் வகையில் வானொலியில் இடம்பெறச் செய்துவரும் அரசுக்கு சைவ மக்கள் நன்றி கூறுதல் வேண்டும்.

இவ்வாறு நல்லூர் தீர்த்தத் திருவிழாவில் நல்லூர் அஞ்சல் நிலையத்திலிருந்து வானொலிமூலம் நல்லூர் சிறப்புப்பற்றி உதவிமேயர் திரு ஆ. [illegible] பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலுங்குறிப்பிட்டதாவது:

இன்று நல்லூர்க்கந்தன் ஆலயவீதிகள்தோறும் பல கட்டங்களையும், சமய நூல்நிலையங்களையும் மடங்களையும் சமய ஆராதனைகளையும் அன்னதானங்களையும் தண்ணீர்பந்தல்களையும் ஆச்சிரமங்களையும் ஆதீனங்களையும் காண்கின்றோம். இவற்றுக்கு பக்தர்கள் பலன் அடைகின்றனர். தொன்மை பொருந்திய பல ஆலயங்கள் நல்லூர்க் கந்தன் ஆலயத்தைச் சூழ உள்ளமை இவ்வாலயத்திற்கு அதிக சிறப்பைத் தருவதாகும் இவற்றைப் பேணிப் பாதுகாத்து நல்லூரை ஒரு புனித நகராகப் பிரகடனப்படுத்த சைவ மக்களும் அரசாங்கமும் உதவவேண்டும்.

## சோற்றில் நஞ்சு?

### 14 பௌத்த குருமார் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, திங்கள் அன்னதான மொன்றில் கலந்து கொண்ட 14 பௌத்த குருமார்கள் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அகலவத்தைபத்திராஜபிரிவினையைச்சேர்ந்த இந்த 14 பௌத்தகுருமார்களும், அன்னதான வைபவமொன்றில் கலந்துகொண்டதாகவும், அதைத்தொடர்ந்து மயக்க முற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் உண்ட உணவில நஞ்சு கலந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

அகலவத்தையிலுள்ள பம்புற ஆஸ்பத்திரியில் இவர் களிசிச்சைபெறுகின்றனர்.

### வடபகுதி அசைஸ் விசாரணை

# எதிரிகள் மூவரும விடுதலை:

## ஏழாலை கைக்குண்டு வீச்சு வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம் செவ்வாய் ஏழாலைக் கைக்குண்டு வீச்சு வழக்கில் எதிரிகள் மூவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விசாரணை நடுவில் நிறுத்தப்பட்டு ஜூரிமார் மந்திராலோசனை செய்தபின் எதிரிகள் சுற்றவாளிகளென அபிப்பிராயம் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் திரு ஓ எல் டி கிறெட்சர் எதிரிகளனைவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

சென்ற வருடம் மார்ச் மாதம் 28-ம் திகதி ஏழாலையில் சந்தையா துரைராசா என்பவரது வீட்டுக்குக் கைக்குண்டு வீசிச்சேதப்படுத்தியதாக கதிர்காமர் கந்தசாமி, வல்விபுரம் பசுபதி, செல்லப்பா வடிவேலு ஆகியோர் மீது இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

புறக்டர் எஸ் ஸ்ரீதரனின் அனுசரணையுடன் அட்வகேட் ஈ விவேகானந்தன் முதலாம் எதிரியின் சார்பிலும் புறக்டர் வி யோகேஸ்வரனின் அனுசரணையுடன் திரு விவேகானந்தன் இரண்டாம் எதிரியின் சார்பிலும் மூன்றும் எதிரியின் சார்பில் புறக்டர் ஸ்ரீதரனும் ஆஜரானார்கள். எதிரிகளுக்காக புறக்டர் திரு ஆர் சிவகணேசன் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

## கொழும்பு புதிய பிஷப்

கோட்டை, திங்கள் வண. சிறில் வின்சென் அபயநாயக்கா கொழும்பின் புதிய பிஷப்பாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். காலஞ்சென்ற கொழும்பு பிஷப் ஹரல்ட் டிசில்வாவின் இடத்திற்கு இவர் நியமனம் பெற்றுள்ளார். இவர் கல்லூரி அதிபராகவும் பத்திரிகாசிரியராகவும் அங்கிலிக்கன் பாடசாலைகளின் மனேஜராகவும் பணியாற்றியுள்ளார். அவுஸ்திரேலியாவில் பல மாதங்கள் இவர் தங்கியிருந்து மார்க்கப்பிரசங்கங்கள் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் நிர்வாகத்தில் புதிய மாற்றம்

## 4 பொலிஸ் நிலையங்களுக்கு ஒரு உதவி சுப்பிரிண்டன்

கொழும்பு, திங்கள் நாடுபூராவுமுள்ள பொலிஸ் நிலையங்களின் நிர்வாகங்கள் விரைவில் மாற்றியமைக்கப்படவிருக்கின்றன.

சட்டத்தையும் ஒழுங்கையும் சீராக நிலைநாட்டுவதற்கும் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நெருங்கிய நல்லுறவை வலுப் படுத்துவதற்காகவும் பொலிஸ்படை நிர்வாகத்தில் சில முக்கிய திருத்தங்கள் செய்யப்படவிருப்பதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதில் ஒரு அம்சமாக நான்கு பொலிஸ் நிலையங்களுக்கு ஒரு உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் நியமிக்கப்படவிருக்கிறார். இதனால் நிர்வாகம் மேலும் சீராகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது அதிக பொலிஸ்நிலையங்களை உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்கள்

(2-ம் பக்கம் பார்க்க)

**நாகம்ஸ்சினிமா**
கல்லூரம்
தினசரி 4-30க்கு மட்டும்
சனி, ஞாயிறு: காலை 10-30
Jim Brown
in
100 RIFLES

தினசரி மாலை 6-30, 9-45
சனி, ஞாயிறு 2 30, 6-30, 9-45
திலிப்குமார்
வைஜயந்திமாலா
நடித்த
**பாட்டாவியின் சபதம்**

**வெஸ்லி சினிமா**
காலிப்பாய்
பி ப 2-30, 6-30, 10-00
ஏ.வி.எம். ராஜன்-வாணிஸ்ரீ
நடித்த
அன்னையும் பிதாவும்

**ராஜா** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப 2-30, மாலை 6-30, இரவு 10-00 மணி.
எம் ஜி ஆர்.
வைஜயந்திமாலா
நடித்த
**பாக்காத் திருடன்**

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m. only
George Kennedy. Ann Jackson
in
FALSE WITNESS (Cinemascope)

**றீகல்** யாழ்ப்பாணம் தினசரி பி. ப. 2-00
இரவு 9-45 மட்டும்
சிவாஜி கணேசன், பத்மினி,
நாகேஷ்
நடித்த
**பேசும் தெய்வம்**
(புதியகொப்பி)

**ராணி** (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 இரவு, 6-30, 10-00
சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
நடித்த
**கஸ்தூரி திலகம்**

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். வாணிஸ்ரீ-நம்பியார்
அசோகன், ஜோதிலட்சுமி, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
**தலைவன்**

**வெலிங்டன்** (யாழ். நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30
இரவு 10-00 மணி

**லிடோ** (யாழ். நகர்)
காலை 10-30, பி. ப. 2-00
மாலை 6-00, இரவு 9-30

மற்றும்
கெப்பிட்டல்—பிளாஸா—மைலன்
திரைகளில்



நடிகர் திலகம்
**சிவாஜி கணேசன்**
(3 வேடங்களில்)
**ஜெயலலிதா**
நாகேஷ்
நம்பியார்
சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்



**தெய்வ மகன்**
திரைக்கதை — டைரக்ஷன்
ஏ. ஸி. திருலோகசந்தர்


## வடமராட்சி மீனவருக்கு வசதிகள்

பருத்தித்துறை, திங்கள்
ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவரின் பாதுகாப்புக்காக, வடமராட்சிப் பகுதியிலுள்ள குடத்தனை, நாகர்கோவில், தொண்டமானாறு ஆகிய இடங்களில் சாலை காட்டும் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் வடமராட்சி வடக்கு கிழக்குக் காரியாதிகாரி பிரிவில் ரூபா 3000 செலவில் மீன்வகை ஏலவிற்பனை நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. பொலிகண்டியிலும் பருத்தித்துறை வெளிச்சவீட்டுக் கண்மையிலுமாக இருநிலையங்களை நிறுவ மீன்பிடி அமைச்சு தீர்மானித்திருப்பதாக பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் தெரிவித்தார்.

## பனையால் விழுந்து மரணம்

வல்வெட்டித்துறை, திங்கள்
அல்வாய் தெற்கைச் சேர்ந்த காத்தான் வேலுப்பிள்ளை (வயது 60) பனை மரத்தில் ஏறி ஓலைவெட்டும்பொழுது தவறிவிழுந்து மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இறந்தவரின் மனைவி சின்னத்தங்கம் சாட்சியமளிக்கையில் இறந்தவர் அருவது மரத்தில் ஏறி ஓலை வெட்டும்போது தவறி விழுந்ததாகவும் உடனே தான் மடியில் தூக்கிவைத்து கதறியதாகவும் சொன்னார்.

டாக்டர் திரு. சே. சொர்ணலிங்கம் பிரேத பரிசோதனை செய்தபின் மரணவிசாரணை அதிகாரி ஆர். எஸ். இராமநாதன் தற்செயலாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## கொடியேற்றம்

நாவடி, ஞாயிறு
கோக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 27-ந்திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

## இன்று சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
கோண்டாவில் கிழக்கு பலாலிவீதிச் சந்திக்கு அண்மையிலுள்ள அற்புத நர்த்தன விநாயகர் ஆலய மகா சங்காபிஷேகம் இன்று நடைபெறுகிறது. பிரதம குருக்கள் இணுவில் பிரம்மஸ்ரீ கு இராமநாதக்குருக்கள் கிரியைகளை நடத்துவார். நண்பகல் அன்னதானம் இடம்பெறும்.

## கட்டைவேலி ஆரம்ப சங்கம்

பருத்தித்துறை, திங்கள்
கட்டைவேலிப் பலநோக்குக் கூட்டுறவு ஆரம்பசங்கம் இம்மாதம் 24-ந் திகதி முதல், தனக்குக் கீழ்உள்ள சுமார் 18 கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலைகுறைந்ததும் தரமுயர்ந்ததுமான துணிகளை விநியோகிக்க விருப்பதாக மேற்படி சங்கத் தலைவர் திரு. த சிதம்பரப்பிள்ளை நமது நிருபரிடம் தெரிவித்தார்.


MANOHARA- Jaffna
Daily
4-45, 7-00 & 9-45 p. m.
Saturday, Sunday 10-30 a m
Cornel Wild
in
BEACH RED
(War film - Color)


## விளம்பரம்

**கிளிநொச்சி - உருத்திரபுரம் பயிர்ச்செய்கைக் கமிட்டி கமவிதானை/எழுதுவினைஞர் பதவிக்கான வெற்றிடம்**

1. முழுப்பெயரும் நிரந்தர விலாசமும்:
2. வயது:
(30 வயதுக்குட்பட்டிருக்க வேண்டும்.)
3. கல்வித்தகைமை:
ஜி. சி. ஈ. (சாதாரணம்)
(ஆங்கிலம் சித்தியடைந்திருக்க வேண்டும்.)
4. வேதனம்: எல்லாமுமடங்கிய 150 ரூபாவும் சைக்கிள் அலவன்ஸ் மாதம் 12-50 சதம்.
5. விண்ணப்ப முடிவு திகதி: 31-8-71. (பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்)

குறிப்பு:-
(a) அரசினர் காரியாதிகாரி பிரிவில் நிரந்தரமாக வசிப்போருக்கு சலுகை வழங்கப்படும்
(b) நீர்ப்பாசனமூலம் நெற்பயிர்ச்செய்கை அறிவு இன்றியமையாதது.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: கௌரவ காரியதரிசி, உருத்திரபுரம் பயிர்ச்செய்கைக் கமிட்டி, கிளிநொச்சி. 2980

## சாவகச்சேரி நகர சபை கேள்விப் பத்திர விளம்பரம்

29-7-71-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் கால எல்லை 27-8-71-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விப்பத்திரபாரங்கள் 26-8-71-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இவ்வேலைகளுக்கு ஏற்கனவே கேள்விப்பத்திரங்கள் அனுப்பியுள்ள கொந்தராத்துக்காரர்கள் திரும்பவும் அனுப்பத் தேவையில்லை.

மற்றைய விபரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. கனகரத்தினம்,
தலைவர்,
நகர சபை,
சாவகச்சேரி.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி.
21-8-71. 2982

## 'டாக்டரை மாற்றுதீர்'

வல்வெட்டித்துறை திங்கள்
வல்வை இந்திராணி வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் டாக்டர் திரு வி வேலானந்தனை இடமாற்றம் செய்யவேண்டாம் என்று பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினமும், வல்வை நகரசபையினரும் ஆகியோர் மேலிடத்தைக் கேட்டுள்ளனர்.

## வித்தி...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவற்றைக் கவனிக்க வேண்டும். தரக்குறைவான பாடசாலைகளுக்குச் சென்று அப் பாடசாலைகளின் தரக்குறைவுக்குக் காரணம் என்ன அத் தரக்குறைவைப் போக்க என்னென்ன செய்யலாம் என்பது குறித்து ஆராய வேண்டும்.

இவ்வாறு பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் பொழுது அப் பாடசாலை அதிபர்களுக்கு அப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்த என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என ஆலோசனைகள் கூற வேண்டும்.

## வரி-விளம்பரம்


### விற்பனைக்கு

பரந்தன் குஞ்சுப்பரந்தன் 3ருட்டிக் 3-ம் கட்டைக் கருகாமையில் இருபோகம் விளைவிக்கக்கூடிய 16 ஏக்கர் தெற்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கீழ்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். க. சரவணமுத்து, சரவணபவனம், சாவகச்சேரி. 3508

### தேவை

இரும்புக்கடையில் விற்பனையாளராக கடமையாற்றுவதற்கு ஒருவர் தேவை. 20 வயதிற்குட்பட்டோர் நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 222, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். 3509

### கல்வி

கடந்த மார்கழி க. பொ. த. சாதாரண கலை, விஞ்ஞான, வர்த்தகப் பாடங்களில் 65 வீதம் C, 20 வீதம் S, 5 வீதம் D பெற்றுள்ளார்கள். எதிர்வரும் மேற்படி பரீட்சைக்காக கலை, விஞ்ஞான, வர்த்தக, சிங்கள, ஆங்கில பாடங்கள் 50 வருட ஆசிரியராலும் அனுபவமுள்ள பட்டதாரிகளாலும் கற்பிக்கப்படுகின்றன. உடன் சேர்ந்து படிக்கவும். சித்தி நிச்சயம். இருபாலாருக்கும் விடுதி வசதியுண்டு. வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 1924-ல் ஆரம்பிக்கப்பட்டது. 3499


## ஆலயப் புனருத்தாரணம்

கொடிகாமம், திங்கள்
எழுதுமட்டுவாள் வடக்குப் புராதன பிரசித்திபெற்ற ஆலயமான மருதங்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தின் புனருத்தாரண கட்டட அடிக்கல் நாட்டுவிழா எதிர்வரும் 27ம் திகதி நடைபெறவிருக்கிறது.

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 26ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிச் செப்டம்பர் மாதம் 5ந் திகதி வரை நடைபெறவுள்ளது. 4ந் திகதி தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தமும் இடம்பெறும்.

## பொலிஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவனிக்கவேண்டிய நிலை இருப்பதால் சிறந்தமுறையில் செயல்பட முடியாதிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வித சீர் திருத்தங்களால் பலகுற்றங்களைக் கட்டுப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(சி பி ஏ

## உதவிப்பொலிஸ் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், செவ்
யாழ்ப்பாணம் முதலாவது உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்டனு திரு பேர்ட்டன் பெரேராவும் 2-வது உதவிப்பொலிஸ் சுப்பிரின்டென்டனு திரு லின்டா விஜயசூரியாவும். கிளிநொச்சி உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்டனு திரு செறி அமரசேகராவும் மன்னார் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்டனு திரு சந்தையாவும் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரின்டனு திரு முனசிங்காவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பொலீவியா கிளர்ச்சியாளர் ஆட்சியைக் கைப்பற்றினர்

## பெருநாட்டுத் தூதரகத்தில் முன்னாள் அதிபர் அடைக்கலம்

லாபாஸ், ஆகஸ்ட் 23

பொலிவியாவில் வலதுசாரிகள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர். முன்னாள் அதிபர் கேணல் ஜுவான் டொரஸும் அவரது ஆதரவாளர்கள் 25 பேரும் லாபாசிலுள்ள பெரு நாட்டுத் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

பொலீவியாவில் ஆட்சி புரிந்துவந்த இடதுசாரிகளை எதிர்த்து வலதுசாரிகள் செய்த புரட்சி இறுதியில் வெற்றிபெற்றுள்ளது. கடந்த மூன்று நாட்களாக இரு தரப்பினருக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தில் பலர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர். புரட்சி செய்த வலதுசாரிகளுக்கு கேணல் பன்ஸார் தலைமை தாங்கினர். இவரது தலைமையில் இப்பொழுது புரட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இவர்களது வெற்றிக்கு முன்பு டொரஸுக்கு ஆதரவு தெரிவித்த விமானப்படையினர் பின்பு வலதுசாரிகள் பக்கம் திரும்பியதே காரணம் எனச் சொல்லப்படுகிறது.

மூன்று நாள் இரத்தம் சிந்திய போராட்டத்தின் பின் வலதுசாரிகள் தலைநகர் லாபாஸைக் கைப்பற்றினர். பொலீவியாவின் அதிபராக கேணல் பன்ஸார் பதவி ஏற்றுள்ளார். ஆட்சியைக் கைப்பற்றியதும் கேணல் பன்ஸார் நாட்டுமக்களுக்கு வானொலி மூலம் செய்தி விடுத்தார். அதில் நாட்டில் குழப்பமும் அராஜகமும் தலைவிரித்தாடியது. இதனால் நாடு களைப்படைந்துவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

### தூதரகத்தில் அடைக்கலம்

பதவியிலிருந்து வீழ்த்தப்பட்ட முன்னாள் அதிபர் கேணல் ஜுவான் டொரஸ் லாபாசிலுள்ள பெரு நாட்டுத் தூதரகத்தில் அடைக்கலம்புகுந்திருப்பதாக பெரு நாட்டு வானொலி தெரிவித்தது. இவருடன் இவரது ஆதரவாளர்கள் 25 பேரும் அங்கு அடைக்கலம் புகுந்துள்ளனரென்றும் அவர்களுக்கு அங்கு பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வானொலி அறிவித்தது.

நாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அலுவலகங்களிலும் கல்லூரிகளிலும் இடதுசாரிகளைத் தேடிப்பிடிக்கும் செயலில் புரட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளதாக வெளிநாட்டு நிருபர்கள் அனுப்பிய செய்திகளில் தெரிவித்துள்ளனர்.

இப்போராட்டத்தில் மாணவர்களும் தொழிலாளர்களும் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்ட கேணல் டொரஸுக்கு ஆதரவாகப் போராடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

இஸ்லாமும் - சோவியத் யூனியனும்

## 'போலி' நூல்பற்றி மாஸ்கோவிலும்மறுப்பு

மாஸ்கோ, ஆக. 23

"சோவியத் யூனியனும் இஸ்லாமியமும்' என்ற பெயரில் நொவஸ்தி மர்மமாக விநியோகித்துள்ள நூல் போலியானதாகும்.

இங்கு நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மகாநாட்டில் நொவஸ்தி ஸ்தாபனத்தின் உபதலைவர் சேர்ஜ் ஹச்சாதுரோவ் இவ்வாறு கூறி சோவியத் எதிர்ப்பு பொய்ப் பிரச்சாரத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

இந்நூல் இலங்கை உட்பட, மத்திய கிழக்கிலும் முஸ்லிம்நாடுகளான சோமாலியா, ஐ. அ. கு. முதலிய நாடுகளுக்குள்ளும் பிரவேசித்துள்ளது.

இலங்கையிலுள்ள சோவியத் தூதுவர் ரஃபீக் நிஷானோவையும், நொவெஸ்தி ஸ்தாபனத்தையும் சம்பந்தப்படுத்தும் இந்நூல், 'ஒரு போலி விஷமப் பிரசுரம். இஸ்லாத்தை அவமானப்படுத்துகிறது. கீழ்த்தரமான அரசியல் நோக்கத்தைக் கொண்டது' என்று ஹச்சாதுரோவ் கூறினார்.

'ஆத்திரமூட்டுவதைநோக்கமாகக்கொண்ட நூலுக்குப் பின்னாலுள்ள நபர்களும் ஸ்தாபனங்களும் இஸ்லாமிய மக்கள் மத்தியில் சோவியத் எதிர்ப்பு மனப்பான்மையை கிளறிவிட முனைந்துள்ளனர்' என்று அவர் சுட்டிக்காட்டினார்.

## கா-ஓ-கீ போட்டியிட மாட்டார்

சைகோன், ஆக. 23

தென்வியட்நாம் அதிபர் தேர்தலில் தாம் போட்டிக்கு நிற்கப்போவதில்லையென்று உதவி அதிபர் கா-ஓ-கீ அறிவித்திருக்கிறார்.

அக்டோபர் 3-ம் திகதி தேர்தல் நடைபெறவிருக்கின்றது.

## இஸ்ரேலை வெளியேற்ற முயற்சி

கெய்ரோ, ஆகஸ்ட் 23

ஐ. நா.விலிருந்து இஸ்ரேலை வெளியேற்றுவதற்கு எகிப்து திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகின்றதாம். வெளிநாட்டு விவகாரங்களுக்கான உதவிப் பிரதமர் முகம்மது றியாட் இந்தத் திட்டத்தைத் தயாரிக்கிறாராம்.

வாஷிங்டன், ஐ. நா., மற்றும் மாஸ்கோ ஆகிய இடங்களிலுள்ள எகிப்திய தூதர்களுடன் ஆலோசனை நடத்தியபின் திரு. றியாட் இத்திட்டத்தை தயாரித்துவருகிறார்.

---

முன்னாள் உபஜனாதிபதி

## அலிசாப்ரிக்கு மரண தண்டனை விதிக்கப்படுமா?

கெய்ரோ, ஆகஸ்ட் 23

ஐக்கிய அரபுக் குடியரசில் 91 பேருக்கு எதிரான வழக்கு முடிவடைந்துள்ளதாகத் தெரிகிறது. இவ்வாண்டு மே மாதம் ஜனாதிபதி அன்வர் சதாத்தை ஆட்சியிலிருந்து வீழ்த்த சதி செய்தார்கள் என்றதன்பேரில் இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. முன்னாள் உபஜனாதிபதி அலிசாப்ரி உட்பட பல முக்கிய நபர்கள் சிவ் விசாரணையின் பொழுது விசாரிக்கப்பட்டார்கள். கடந்த மே மாதமே இவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

எதிர்குற்றம் சாட்டப்பட்டவர்களின் முன்னாள் உள்நாட்டமைச்சர், முன்னாள் யுத்த அமைச்சர், அரபு சோஷலிச முன்னணியின் முன்னாள் செயலாளர் ஆகியோரும் உள்ளனர்.

இந்த வழக்கில் முக்கிய எதிரிகளுக்குமரணதண்டனை விதிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வட அயர்லாந்தில் கலவரம்

பெல்பாஸ்ட் ஆகஸ்ட் 23

வட அயர்லாந்தில் பல இடங்களில் வெடிகுண்டுச் சம்பவங்கள் நடைபெற்றன. இதில் இருபெரும் குண்டு வெடிச் சம்பவங்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மூன்றடுக்கு கட்டிடத்தின் முதல் அடுக்கில் வைத்த குண்டு வெடித்ததால் அதன் கூரை வீதியில் வந்து விழுந்தது.

## உபதபால் நிலையம் வரும்

அம்பன், திங்கள்

வல்லிபுரக் கோயிலுக்கு அண்மையிலுள்ள வல்லிபுரக்குறிச்சிக் கிராமத்திற்கு விரைவில் உபதபாற்கந்தோரொன்று நிறுவப்படவிருக்கின்றது. உபதபாற்கந்தோர் அதிபருக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளது.

---

## வட அயர்லாந்தில் பயங்கர நிலைமை

லண்டன், ஆகஸ்ட் 23

அமைதியில் திளைத்துக்கொண்டிருந்த பெல்பாஸ்ட் நகரத்தில் திடீரெனக் கலவரங்களும் கைக்குண்டுகளும் வெடிக்கின்றன; தீப்பிடிக்கின்றன. பதினொரு பேர் அபாயநிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படுகின்றனர். கைக்குண்டுகள் எங்கு எப்பொழுது வெடிக்குமென்று தெரியாத நிலை.

மேற் குறிப்பிட்டவற்றை வட அயர்லாந்துத் தலைநகரில் தற்போது இடம்பெற்று வரும் பயங்கரவாத இயக்கம் ஒன்றின் செயல்களென பிரிட்டிஷ் அரசாங்க அறிக்கைகள் விபரித்திருக்கின்றன.

ஐரிஷ் குடியரசு இராணுவத்(ஐரா)தின் மனிதத்தன்மையற்ற, பண்பற்ற, கொடூரச் செயல்கள் என்று இவற்றுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறார் வட-அயர்லாந்து இராணுவத்தின் தலைமை அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சேர் ஹரி ரூஸே. எங்குமே கண்டும் கேட்டுமிராத கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும், பயங்கரவாதிகளும்கொண்ட கும்பல்தான் இந்த ஐரிஷ் குடியரசு இராணுவம் என்று அவர் மேலும் அபிப்பிராயம் கூறுகிறார்.

வட அயர்லாந்துப் பிரதம மந்திரி திரு. பிரையன் பேக்னர் இவ்வன்செயல்கள் பற்றிக் குறிப்பிடுகையில், அல்ஸ்டரிலுள்ள புரொட்டஸ்தாந்து, ரோமன் கத்தோலிக்க சமூகங்களைப் பிரிக்க முயலும் இப்பயங்கரவாத இயக்கத்தை நிச்சயம் ஒழிக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார். இக்கலவரத்தில் பிரிட்டிஷ் இராணுவம் இதுவரை 13 பேர்களை இழந்துள்ளது. இதைவிட இரு இளம் ஸ்கொட்டிஷ் வீரர்கள் பெல்பாஸ்டுக்கு வெளியே படுகொலைசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இதுபற்றிக் குறிப்பிடுகையில் லெப்டினன்ட் ஜெனரல் சேர் ஹரி ரூஸே, இந்த அநியாயமான உயிரிழப்புகளுக்குக் காரணமானவர்களை நாம் நிச்சயம் பூண்டோடு அழித்தே தீருவோம் என்று கடும் எச்சரிக்கை செய்துள்ளார்.

வட அயர்லாந்தின் விருத்திக்கும் வளர்ச்சிக்கும் நாம பாடுபடுகிறோம் என்று கூறிக்கொள்ளும் ஐரிஷ் குடியரசு இராணுவம், அதற்கு முற்றிலும் மாறான செயல்களில் இப்பொழுது ஈடுபடுகிறது. வட அயர்லாந்தின் வளர்ச்சியை இவ்வன்செயல்கள் பெரிதும் பாதித்துள்ளன. வட அயர்லாந்து செழிப்புற்று வாழ்வதற்கு, பொருளாதார, சமூக வளர்ச்சி மிகவும் அவசியம் என்று வட அயர்லாந்து நிதியமைச்சர் திரு. ஜோன் புருக் கூறியுள்ளார்.

---

## விற்பனை செய்யப்படும்

மன்னார், திங்கள்

மன்னார் அல்-அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் நடந்துமுடிந்த மரவேலைப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த காட்சிப்பொருட்கள் அத்தனையும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இம்மாதம் 27-ம் திகதியன்று மேற்படி காட்சிப் பொருட்கள் அத்தனையும் குறிக்கப்பட்ட விலையிலும் பகிரங்க ஏலத்திலும் விற்பனை செய்யப்படவுள்ளன.

---



நாவற்குழி வீடமைப்புத் திட்டக் காணிச் சீட்டிழுப்பு வைபவம் சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றபோது வீடமைப்புச் சங்க உபதலைவர் திரு. து. சீனிவாசகம் தலைமையுரை நிகழ்த்துவதையும் இவ் வைபவத்தில் கலந்துகொண்ட வீடமைப்புத் திணைக்கள ஆணையாளர் திரு. ஐ. இறிக்கி சேர்ஜண்டோ உரையாற்றுவதையும் நாவற்குழி நவநகர் வீடமைப்புத் திட்ட வரைபடத்தை சங்கச் செயலாளர் திரு. எஸ். கந்தமூர்த்தி ஆணையாளருக்குக் காண்பித்து விளக்குவதையும் காணலாம்.

படம்: 'சிட்டு'

## இலங்கை-சீன டேபிள் டெனிஸ் 2-வது டெஸ்ட்

# இலங்கைவீரர்களின் சிறந்த ஆட்டம்!

## சீன வீரர்களின் காட்சி ஆட்டம் ரசிகர்களைப் பிரமிக்க வைத்தது

(நமது விளையாட்டு நிருபர் "தேவா")

யாழ்ப்பாணம், செவ். இலங்கை - சீன டேபிள் டெனிஸ் கோஷ்டிகளிடையே நேற்று முன்தினம் யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டியில் ஆண்கள் பிரிவில் இலங்கைக் கோஷ்டி 5-3 ஆட்டங்களால் வெற்றி பெற்றது தெரிந்ததே.

**பெண்கள் ஆட்டம்**

2-வது டெஸ்ட் போட்டியை இருநாட்டினதும் பெண்கள் கோஷ்டியினரே முதலில் ஆரம்பித்து வைத்தனர். முதலில் இலங்கைப் பெண்மணி நந்தினி ஸகிஸடோ 21-10, 21-12 புள்ளிகள் வித்தியாசத்தால் தோல்வியடைந்தார். 2-வது ஆட்டத்தில் இலங்கைப் பெண்மணி ஸ்ரீநின் லூக்கஸ் 21-9, 21-10 புள்ளிகள் வித்தியாசத்தால் தோல்வியடைந்தார். 3-வது ஆட்டத்தில் மீண்டும் நந்தினி ஸகிஸடோ 21-19, 21-15 புள்ளிகள் வித்தியாசத்தால் தோல்வியடைந்தார். இவர் இப்போட்டியில் சீனப் பெண்மணியுடன் மிகவும் கடுமையாகமோதிய போதிலும் சீனப்பெண்மணியின் மின்னல் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தோல்வியடைந்தார்.

இருநாட்டுப் பெண்கள் இரட்டையர் கோஷ்டிகளிடையே நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கைப் பெண்மணிகளான செல்வி சாந்தி டி அப்றூவும், செல்வி நந்தினி ஸகிஸடோவும் மிகவும் திறத்துடனும், விடாமுயற்சியுடனும் போட்டியிட்டு 21-12, 21-13 புள்ளிகள் வித்தியாசத்தால் சீனப் பெண்மணிகளைத் தோற்கடித்தனர். செல்வி சாந்தி டி அப்றூவின் மிகச் சாதுரியமான ஆட்டத்தினுல்தான் இவர்கள் இப் போட்டியில் வெற்றி பெற்றனர்.

**ஜூனியர் பிரிவுப் போட்டி**

இருநாட்டு ஜூனியர் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற மூன்று ஆட்டங்களிலும் சீனக் கோஷ்டியினரே 21-12, 23-21; 21-9, 21-16; 21-12, 21-18 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றனர். இப் போட்டியில் சீனக் கோஷ்டி வீரர்களின் ஆட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. இவர்கள் பல சாதுரிய வழிகளைக் கையாண்டு விளையாடியது பார்ப்பதற்கு மிகச் சுவையாக இருந்தது.

**ஆண்கள் பிரிவுப் போட்டி**

சீன - இலங்கை ஆண்கள் பிரிவுக் கோஷ்டிகள் மோதிய ஆட்டங்களில், இலங்கை வீரர்கள் மிகவும் சிறப்பாகவும் விடாமுயற்சியுடனும் விளையாடி உலகப் புகழ்சீன வீரர்களைத் தோற்கடித்தது பாராட்டுக் குரியது.

இப்போட்டியில் இலங்கை வீரர் கோமஸின் ஆட்டம் மிகவும்சிறந்து விளங்கியது. இவரை சீன வீரர்கள் தோற்கடிப்பதற்குப் பல புதிய வழிகளைக் கையாண்டு விளையாடிய போதிலும், இவை அனைத்தையும் வீரர் கோமஸ் மிகச் சாதுரியமாக முறியடித்து வெற்றி பெற்றார்.

வீரர் நிமல் பெரேராவும் காப்டன் லூக்கஸும் முதல் போட்டிகளில் தோல்வியடைந்தபோதிலும் ஈற்றில் இவர்கள் பங்குபற்றிய ஆட்டங்களில் வெற்றி பெற்றது சிறந்த அம்சமாகும்.

முதல்போட்டியில் இலங்கைக் கோஷ்டியின் காப்டன் லூக்காஸை சீன வீரர் லீசிப்பால் 21-15, 21-15 புள்ளிகள் வித்தியாசத்தால்தோற்கடித்தார்

வீரர் கோமஸுக்கும் வீரர் பூலேசிங்குக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் முதல் ஆட்டத்தில் சீனவீரர் வெற்றிபெற்ற போதிலும் அடுத்து நடைபெற்ற இரு ஆட்டங்களிலும் வீரர் கோமஸ் அடுத்தடுத்து வெற்றிபெற்றார். இவர் 11-21, 21 20, 21-18புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றார்.

வீரர் லிசியானிடம் வீரர் நிமல் பெரேரா 21-17, 21-15 புள்ளிகளால்தோல்வியடைந்தார். வீரர் பூலேசிங்கிடம் வீரர் லூக்கஸ் 21-14, 21-15 புள்ளிகளால் தோல்வியடைந்தார்.

நிமல் பெரேராவுக்கும் வீரர் லீசியாவுக்குமிடையில் நடைபெற்ற இரு ஆட்டங்களிலும் வீரர் நிமல் பெரேரா சிறப்பாக விளையாடி 21-19, 21-18 புள்ளிகளால் வெற்றி பெற்றார் வீரர் கோமஸ் வீரர் லீசியாவை இரு ஆட்டங்களிலும் 21-13, 23-21 புள்ளிகளால் வெற்றி பெற்றார்.

வீரர் நிமல்பெரேராவுக்கும் வீரர் பூலேசிங்கிக்குமிடையில் நடைபெற்ற மூன்று ஆட்டங்களில் முதல் ஆட்டத்தில் இலங்கை வீரர் தோல்வியடைந்த போதிலும் அடுத்த இரு ஆட்டங்களிலும் 21-19 21-17புள்ளிகளால் வெற்றி பெற்றார். கடைசியாக நடைபெற்ற போட்டியில் இலங்கை வீரர் காப்டன் லூக்கஸ் வீரர் லிசியாவை 21.16 24-22 புள்ளிகளால் வெற்றி பெற்றார்.

**கண்காட்சிப் போட்டி**

சீன வீரர்கள் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமக்குள்தாமே விளையாடிக் காண்பித்த காட்சிப் போட்டியைப் பார்த்த ரசிகர்கள் மூக்கின்மேல் விரலை வைத்து ஆச்சரியத்தில் ஆழ்ந்து விட்டனர். இவர்களிடையே நடைபெற்ற இந்த ஆட்டம் 'உலக டேபிள் டெனிஸ் போட்டியில் நாம் இப்படித்தான் மோதிக்கொள்வோம்' என்பதை ரசிகர்களுக்குச் சொல்லாமற் சொன்னது போலிருந்தது.

இப்படிப்பட்ட வீரப்புலிகளை நம்மவர்கள் வெற்றி பெற்றது பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமாகும். (தே. நி)

---

### விளையாட்டுப் போட்டி

அம்பன், திங்கள் பருத்தித்துறை தல்லுயின் விளையாட்டுக்கழகத்தின் 3-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி அடுத்த மாதம் 9-ந் திகதி பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் பிரமாண்டமான விளையாட்டுப் போட்டியொன்று நடைபெறவிருக்கின்றது. இப் போட்டியில் மல்யுத்தம், நீச்சல்போட்டி கரபந்தாட்டம், ஆணழகன் தெரிவு ஆகியன இடம் பெறும்.

### வெற்றி தோல்வி இல்லை

புத்தளம்,திங்கள் புத்தளம் 'வெம்பிள்டன்' 'பி'பிரிவு உதைபந்தாட்டக் கழகத்திற்கும், கொழும்பு சந்திரசேனு'பி'பிரிவு உதைபந்தாட்டக் கழகத்திற்குமிடையில் ஒரு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் இரு கோஷ்டியினரும் தலா 1 கோல் போட்டு ஆட்டத்தை வெற்றிதோல்வியின்றி முடித்தார்கள்.

புத்தளம் நகரசபைமைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு ஜனுப் ஹாசன் நடுவராகக் கடமையாற்றினார்.

---

கல்லூரி இல்ல

### விளையாட்டுப் போட்டி

பச்சிலைப்பள்ளி, திங்கள் உடுத்துறை மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப்போட்டி பருத்தித்துறை வட்டார பரிசோதகர் திரு. க நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. பச்சை இல்லம் முதலாமிடத்தையும் நீல இல்லம் இரண்டாமிடத்தையும் மஞ்சள் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றன போட்டியில் வெற்றி யீட்டியவர்களுக்கு திருமதி. ஆர் நவரத்தினம் பரிசில்களை வழங்கினார்.

### கரபந்தாட்டப் போட்டி

பச்சிலைப்பள்ளி, திங்கள் உடுத்துறை மகா வித்தியாலய விளையாட்டுக் கழகத்துக்கும் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்ட போட்டியில் மகா வித்தியாலய விளையாட்டுக் கழகம் 3-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது போட்டிக்கு திரு சி மரியாம்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்

---

மாவு இறக்கிவிட்டு

### 27-ம் திகதி கப்பல் திரும்பும்

அம்பன், திங்கள் 9 ஆயிரம் தொன் மாவுடன் சில தினங்களுக்கு முன் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்த பாசிபூட் என்ற கப்பல் இம்மாதம் 27-ந் திகதி திரும்பவிருக்கிறது. மாவின் பெரும் பகுதி இறக்கப்பட்டுவிட்டதாகவும் மிகுதியும் இறக்கி முடிந்தவுடன் கப்பல் 27-ம் திகதி புறப்படுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

---

### தொல்புரம் வெற்றி

சுழிபுரம், திங்கள் தொல்புரம் மத்திய சனசமூகநிலையக் கோஷ்டிக்கும் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகக் கோஷ்டியினருக்கும் சிநேகபூர்வமாக நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினர் வெற்றிபெற்றனர். போட்டி தொல்புரம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. திரு இ. சிவராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்

---

### டாக்டர் சொல்தட்டியவர் வீட்டில் மரணம்

வல்வெட்டித்துறை, திங்கள் டாக்டரின் அறிவுரை கேளாது வார்ட்டிலிருந்து வெளியேறிய நோயாளி ஒருவர் சில மணி நேரத்திலேயே மரணமானார். புலோலிக் கிராமசபையின் 2-ம் வட்டார உறுப்பினரான திரு. சங்கரப்பிள்ளை என்பவரே இவ்வாறு மரணத்திற்குள்ளானவர்

இருதய வியாதிகாரணமாக மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவந்த இவர் வைத்திய அதிகாரியின் அறிவுரையையும் மீறி பதிவேட்டில் கையொப்பமிட்டுவிட்டு ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி வீடு சென்றாராம் பிற்பகல் ஒன்றரை மணியளவில் ஆஸ்பத்திரியை விட்டுச்சென்ற அவர் அடுத்த ஒன்றரை மணி நேரத்தில் தமது இல்லத்தில் காலமானாராம்.

---

### 'சினிமாப்பாடல் நிலையானதல்ல'

தாவடி,ஞாயிறு "சினிமாப் பாடல்கள் நிலையான பாடல்களல்ல பாடுகின்ற பொழுதுதான் அப்பாடல் வாழுகிறது. இன்னொரு பாடல் நாளை யொன்றென மாறிமாறி வரும் பாடல்தான் சினிமாப் பாடல் என்று பண்ணிசைப் புலவர் திரு பி ஏ எஸ். ராசசேகரன் கோண்டாவில் பண்ணிசை நிகழ்ச்சியொன்றில் கூறினார்.

ஆயிரத்துநானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தேவார திருமுறைப் பாடல்கள் என்றும் அழியாது உலக முள்ளளவும் நிலைபெற்றிருப்பனவாகும். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் அருளப்பட்ட முதற் தேவாரமாகிய 'தோடுடைய செவியன்' என்ற பதிகம், சைவ சமய பாடல் புத்தகங்களில் முதலாவதாக இடம் பெற்றிருப்பதைக் காணலாம். எனவே, திருமுறையைப் போற்றுதல் வேண்டுமென்று அவர் மேலும் கூறினார்.

---

### குடியேற்றவாசிகளின் குறைகள்

கொடிகாமம், திங்கள் மிருசுவில் பெண்கள் குடியேற்றத்திட்டத்தினர் நவீன முறையில் பயிர்ச் செய்கையில் ஈடுபட சில குறைபாடுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அடிக்கடி பழுதுபடும் நீரிறைக்கும் யந்திரங்களும் சில கிணறுகளில் நீர்போதாமையும் இவர்களுக்குள்ள முக்கிய குறைகளாதலால்குடியேற்றத்திட்டப் பெண்கள் தற்போது கோழிவளர்ப்பில் அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

---

### டாக்டருக்கு அஞ்சலி

கிளிநொச்சி, திங்கள் காலஞ்சென்ற டாக்டர் ஈ எம் வி நாகநாதனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக 18ம்திகதி கிளிநொச்சிப் பட்டண சபையில் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர்கள் யாவரும் எழுந்துநின்று இரு நிமிடங்கள் மௌனம் அனுஷ்டித்தனர் டாக்டர் நாகநாதன் குடும்பத்தாருக்கு ஓர் அனுதாபச் செய்தியும் அனுப்பப்பட்டது. சபையில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின்னர் கூட்டம் பிறிதோர் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. கூட்டத்துக்கு தலைவர் திரு ச. க. முருகேசு தலைமைவகித்தார்.

"தமிழர் நலமே தம் நலமெனக் கருதி வாழ்ந்து மறைந்த கலாநிதி நாகநாதனின் மறைவுக்கு தமிழ் பேசும் இனத்தின் சார்பிலும், கிளிநொச்சித்தொகுதி மக்கள் சார்பிலும், கிளிநொச்சிப் பட்டண சபைத் தலைவரும், உறுப்பினர்களும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றார்கள் என்று அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

---

### தாய்ச் சங்கத்துடன் தொடர்புகொள்ள கோரிக்கை

சுழிபுரம், திங்கள் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்க வலிமேற்குக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு வ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது முதலாம்தரத் தலைமை ஆசிரியர் நியமனத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கிளைச் சங்க மூலம் தாய்ச்சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தலைவர் இக்கூட்டத்தில் வேண்டிக்கொண்டார் பின்னர் நடைபெற்ற புதிய உத்தியோகஸ்தர் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர். திரு தி நடராசா உபதலைவர்கள். திரு செ கந்தையா, திரு ச க பொன்னம்பலம், செயலாளர். திரு செ சிவஞானம், உபசெயலாளர்கள்: திரு வே சுப்பிரமணியம். திரு நா தம்பித்துரை பொருளாளர்: திரு க வேலாயுதபிள்ளை, உப பொருளாளர்: திரு சி தியாகராசா, கணக்குப்பரிசோதகர். திரு க பசுபதிப்பிள்ளை நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் இ மகாலிங்கம், பொ கந்தசாமி, மா கனகரத்தினம்.

---

### 'கரம்' சாம்பியன்கள்

யாழ்ப்பாணம், செவ். பரந்தன் ரசாயனக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட 'கரம்' போட்டி ஒற்றையர் ஆட்டத்தில் திரு. மேகவர்ணமும், இரட்டையர் ஆட்டத்தில் திரு. எம். எச். எம். முஸ்ஸாமிலும், திரு. ஏ வெனடிற்றும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திரு. மேகவர்ணத்துக்கும் திரு. ஆர். ஜி சிங்கத்துக்குமிடையில் நடைபெற்ற ஒற்றையர் இறுதியாட்டத்தில் திரு. மேகவர்ணம் 2-1 ஆட்டத்தால் வெற்றி பெற்று சாம்பியனானார்.

திருவாளர்கள் எம். எச். எம். முஸ்ஸாமில் - ஏ. வெனடிக்ற் இரட்டையர்கள் திருவர்கள் ராஜரத்தினம், தில்லைநாதன் இரட்டையர்களை 2-1 ஆட்டத்தால் வெற்றி பெற்று சாம்பியன் ஆனார்கள். (தே நி)

### இன்று விநாயக சதுர்த்தி

# விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகர்

தெய்வம் ஒன்று. அதன் உருவ பேதம் அநந்தம். ஒன்று விநாயகக் கடவுளாகிய திருவுருவபேதம். விநாயகர் பிரணவ சொரூபி. ஆன்றோரும் பிரணவத்திலிருந்து தான் உலகம் உண்டாயிற்று என்பர். ஆதலால் மக்கள் எந்தத் தொழிலைத் தொடங்கு முன்னும் விநாயகப் பெருமானைத் தான் வழிபட்டுத் தொடங்குவது வழக்கம்.

**காப்பு**

இப்படியாக விநாயகரை வணங்கித் தொடங்குவதை சைவசமயிகள் எல்லாச் சமய சந்தர்ப்பங்களிலும் செய்து வருவதை நாம் காணலாம். கல்யாண வைபவங்களாயிருக்கலாம்; புதுமனை புகுதலாயிருக்கலாம்; ஏன் ஔவையார் கூட நல்வழி, மூதுரை ஆகிய பாடல்களைப் பாடத்தொடங்கு முன்னர் விநாயகரைத் துதித்து அவர் மேல் காப்புப்பாடிய பின்னரே ஏனைய பாடல்களைப் பாடியுள்ளார். ஔவையார், விநாயகரை வேண்டிடத்து, பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் இவை நான்கும் கலந்து தருவேன் துங்கக் கரிமுகத்துத் தூமணியே என விநாயகரை விளித்து, அவர் சங்கத்தமிழ் மூன்றையும் வேண்டுகிறார். குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்களைக் கொடுத்து அவர்களை இன்புறச் செய்தருளோரி ஔவைப் பிராட்டியும், விநாயகரைச் சிறு பிள்ளையாகப் பாவித்து அவரது அருளை வேண்டுகிறார்.

நாமும் விநாயகருக்குரியதாகிய வாழை, மா, பலா, கரும்பு, மோதகம், எள்ளுருண்டை, அவல், பொரி, விளாம்பழம் ஆகிய நிவேதனப் பொருள்களைப் நிவேதித்து அவரருளைப் பெறுவோம்.

இப்பெருமானுக்குரிய மலர்களாவன: கொன்றை, தும்பை, வன்னி, எருக்கு, அறுகு முதலியன வாகும். பசுவின் சாணத்தால் உருவம் செய்து அதிலே மேற்கூறிய மலர்களைச் சூட்டி, அவ்வுருவத்தில் விநாயகப் பெருமானை மந்திரத்தால் எழுந்தருளப் பண்ணிப் பூஜை செய்வார்கள்.

**புராண வரலாறு கூறும் உண்மை**

விநாயகக்கடவுளின் தம்பியாகிய முருகக்கடவுள் வள்ளியம்மையை மணம்புரியச் செல்லும் போது, தமது தமையனாகிய விநாயகக் கடவுளை வணங்க மறந்து சென்றார். இதனால் அவர் பல இன்னல்கள் அடைந்தாரென்றும், பின்னர் தமது பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டி விநாயகரின் உதவியுடன் வள்ளியம்மையை மணம்புரிந்தார் எனவும் புராணவரலாறுகள் கூறுகின்றன. விநாயகக் கடவுளின் தம்பியாகிய முருகக் கடவுளுக்கே இக்கதி நேர்ந்தால் ஆன்மாக்களாகிய நாங்கள் எம்மாத்திரம்! தம்பியின் தவறையே மன்னிக்காத விநாயகர் எங்களை விட்டு விடுவாரா! எனவே அளப்பரிய கருணைமிகு விநாயகரை வணங்கி அவரருள் பெற்று நாம் எக்காரியத்தையும் தொடங்குவோமாயின் நாம் தொடங்கிய காரியம் இனிது வெற்றி பெறும். எம்மையறியாமல் நாம் செய்யும் தவறுகளுக்கு இந்தப் புராணவரலாறுகள் எம்மை நல்வழிப் படுத்துகின்றன.

**பெயர் வந்தகாரணம்**

விநாயகருக்குப்பல பெயர்களிருந்தபோதிலும் விநாயகர் என்பது இவருக்கு விசேஷமாக அமைந்துள்ளதாகும். வடமொழியிலுள்ள வி(விசேஷம்) என்பது இல்லையென்பதைக் குறிக்கிறது. நாயகர் என்றால் தலைவன் என்பதாகும். எனவே தனக்கு மேல் ஒரு தலைவர் இல்லாதவர் என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது. பிரணவ சொரூபியாகிய இவருடைய திருமேனி ஞானமயமானது. எங்கும் நிறைந்துள்ள இவ்விறைவன் தன்னைப் பக்தி சிரத்தையுடன் வழிபடும் அன்பர்களுக்கு நாளும் அருள் பாலித்து நிற்பர் என்பது வெள்ளிடைமலை.

**தோற்றம்**

ஒருசமயம், பரமசிவனும் பார்வதி தேவியாரும் திருக்கைலாசமலை மந்திரங்கள் எழுந்தருளியிருந்த மண்டபத்தைச் சென்று பார்த்தனர். அங்கே எழுதப்பெற்றிருந்த பிரணவத்தைக் கண்ணுற்றனர். சமஷ்டிப் பிரணவம் பிரிந்து ஆண்டவன் எழுத்தாகிய 'அகர'மும் அம்மை எழுத்தாகிய 'உக'ரமும் சேர்ந்த யானை முகத்தோடுகூடிய விநாயகப்பெருமான் தோன்றினார்.

சகல நலனும் தந்தருளும் விநாயகப் பெருமானின் இத்தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்துள்ளது. ஒருமுறை வியாசர் பாரதம் எழுதுவதற்கு இறைவனின் அருள் வேண்டப்படுவதாயிருந்தது. உடனே விநாயகர் தமது மருப்பொன்றை முறித்து அதனை எழுத்தாணியாகப் பாவித்தார். இப்போதும் மருப்பொன்று ஒடிந்த விநாயகர் தோற்றத்தை நாம் காண்கிறோம். இத்தோற்றம் விநாயகர் தம்மை உள்ளன்போடு வணங்குபவர்களுக்கு சகல விதத்திலும் அவர் அருள்புரிவார் என்பதை நாம் உணரக்கூடியதாகவிருக்கின்றது.

**விநாயகருக்கு உரிய விரதங்கள்**

விநாயகருக்குரிய விரதங்கள் மூன்றாகும். ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமை தோறும் விநாயகரைப் பூஜித்துவந்தால் நமது இடையூறுகள் நீங்கும். அடுத்தது விநாயக சஷ்டி. மற்றது ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தியாகும். இந்த சதுர்த்தியில் ஆவணி மாதத்தில் வரும் வளர்பிறைச் சதுர்த்தி அதிவிசேஷமானது. இதனையே சைவ சமயிகள் 'விநாயகசதுர்த்தி' எனக் கொண்டாடி வருகின்றனர். இத்தினத்திலே விநாயகரை வணங்கித்துதித்தால் எல்லாவித நோய்களும் நீங்கும். வறுமை நீங்கிச் செல்வம் மிகும். எண்ணிய செயல்கள் முற்றுப்பெறும். வினைகள் நீங்கி மெய்யுணர்வு உண்டாகும். ஆதலால் விநாயகரை நாம் உள்ளன்போடு வணங்குவோமாக.

— விமலா —

---

**புதிய பாதை**

சாந்தமருது திக்கல் அட்டாளைச்சேனை கிராம ஆட்சிமன்றத்தைச் சேர்ந்த தைக்காநகரில் புதிய பாதை ஒன்றை மேற்படி மன்றம் அமைத்துவருகிறது.

---


## 29-வது மஹாஜன சம்பத சீட்டிழுப்பு

## கட்டுகஸ்தோட்டையில் 31-8-71-ல்

நடைபெறும்:

# விசேஷ பரிசுகள்.

1வது 2வது 3வது பரிசு பெறும் டிக்கெட்டுகளுக்கு, தேசிய லொத்தர் சபையிடம், ரூ. 1,000/- செலுத்தி ஒரு சில்க் கூறை சேலையைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளலாம். [illegible]

1ம் 2ம் 3ம் பரிசு பெறும் டிக்கெட்டுகளுக்கும், பரிசு பெறும் மூன்று டிக்கெட்டுகளுக்கும், உடனடியாக முன்னுள் உள்ள 10 டிக்கெட்டுகளுக்கும், உடனடியாக பின்னுள் உள்ள 10 டிக்கெட்டுகளுக்கும், தேசிய லொத்தர் சபையிடம் ரூ. 200/- செலுத்தி, தங்க, வெள்ளி ஜரிகை வேலைப்பாடுள்ள ஒரு திறம் பட்டு மணிப்புரி சேலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

ரொக்கப் பரிசுபெறும் 203 டிக்கெட்டுகளுக்கும், தேசிய லொத்தர் சபையிடம் ரூ. 60/- செலுத்தி ஒரு இறக்குமதி செய்யப்பட்ட அச்சடி நைலெக்ஸ் சேலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

ரொக்கப் பரிசு பெறும் 203 டிக்கெட்டுகளுக்கும் ஒவ்வொரு பரிசு பெறும் டிக்கெட்டுக்கும் உடனடியாக முன்னுலும்உடனடியாக பின்னுலுமுள்ளடிக்கெட்டுகளுக்குத் தேசிய லொத்தர் சபையிடம் ரூபா 300/- செலுத்தி துருப்பிடிக்காத உருக்குப்பட்டியுள்ள ஒரு பெண்கள் சீக்கோ கைக்கடிகாரத்தைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ரொக்கப் பரிசு பெறும் டிக்கெட்டுகள் உள்ளடங்கிய 100 டிக்கெட்டுகளுக்கும், ரொக்கப் பரிசுபெறும் டிக்கெட்டுகள், பரிசுபெறும் டிக்கெட்டுகளுக்கு உடனடியாக முன்னுலும் பின்னுலுமுள்ள டிக்கெட்டுகள் தவிர்ந்தவற்றுக்கு, தேசிய லொத்தர் சபையிடம் ரூபா 300/-க்கு மேற்படாத தொகையைக்கொடுத்து ஒரு ரகம் குறிப்பிடப்படாத கைக் கடிகாரத்தைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளலாம்.

203 ரொக்கப் பரிசு பெறும் டிக்கெட்டுகளுக்கும், ஒவ்வொரு பரிசு பெறும் டிக்கெட்டுகளுக்கு உடனடியாக முன்னுலுள்ள பதினைந்து டிக்கெட்டுகளுக்கும் உடனடியாகப் பின்னுள் உள்ள பதினைந்து டிக்கெட்டுகளுக்கும் ரூ. 30/- செலுத்தி ஒரு இந்திய பருத்தி சேலையை அல்லது ரூ 20/- செலுத்தி ஒரு பருத்தி வெள்ளை சாரத்தை அல்லது ரூ. 18/- செலுத்தி ஒரு பருத்தி கலர் சாரத்தை அல்லது ரூ. 35/- செலுத்தி ஒரு துண்டில் 7 யார் கொண்ட 7 யார் அகிப்திய பருத்தி சூட்டிங் துணியைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட கையிருப்பே உள்ளபடியால், இந்த விசேஷ பரிசுகள் முதலில் வருபவர்களுக்கு முதலில் வழங்குதல் என்ற அடிப்படையில் 1971 செப்டெம்பர் 3-ந் திகதி முதல் 1971 செப்டெம்பர் 18-ந் திகதிவரை, வேலை நேரங்களில் வழங்கப்படும். தினசரி 1000க்கு மேற்படாத அடையாள அட்டைகள் வழங்குவதின் மூலம் வழங்கப்படும், ஒருவர் ஒரு தடவையில் ஒரு டிக்கெட் மாத்திரம் சமர்ப்பிக்கும் உரிமையுடையவராவர்.

விசேஷ பரிசுகளுக்கான கோரிக்கைகள், கீழ்க்காணும், விலாசங்களிலுள்ள தேசிய லொத்தர் சபையின் கிளை அலுவலகங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) 113, பொது சந்தைக்கட்டிடம், புதிய நகரம், அனுராதபுரம்.

(2) 66 & 68 பஜார்வீதி, பதுளை.

(3) 131, கொட்டுகொடெல்லவீதி, கண்டி.

(4) 10, புத்தளம் ரோட், குருணாகல்.

(5) 23, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.

(6) 23, மணிக்கூட்டு கோபுரம் வீதி யாழ்ப்பாணம்.

(7) 2, காமினிமாவத்தை, காலி.

(8) ஹேமச்சந்திரா கட்டிடம், புரேட்வே ரோட் மாத்தறை.

(9) 59F, பண்டாரநாயக்க மாவத்தை, இரத்தினபுரி.

இன்றே ஒரு மஹாஜன சம்பத டிக்கெட்டை வாங்கி, விசேஷ விலையில், விசேஷ பரிசைப்பெறுங்கள்.

விசேஷ பரிசாக நீங்கள் பெற்ற பரிசுகளை அதே இடத்தில் வைத்துப் பரிசோதித்துப் பார்க்கும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். ஏதாவது சேதம் அல்லது பழுது இருப்பின் தயவுசெய்து அதனை உடனடியாக திருப்பிக் கொடுத்து விடுங்கள். எடுத்துச்சென்ற பொருட்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வழங்குமிடத்திலிருந்து பொருட்கள் எடுத்துச்சென்றபின், ஏதாவது சேதம் அல்லது பழுது இருப்பின் அவற்றிற்கு நாம் பொறுப்பாளிகளல்ல.

# தேசிய லொத்தர் சபை

## மணிவாக்கு

தீண்டாச் சாதியரென ஒதுக்கப்பட்டவர்களை சாதாரணமாக தீண்டுவதனுல் மட்டும் தீண்டாமையை ஒழித்துவிட முடியாது. அவர்களிடம் உயர்வு தாழ்வு பாராட்டாமல் உடன்பிறந்த சகோதரர்களைப்போல பழகவேண்டும். — மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண வருஷம் ஆவணி மாதம் 8-ந் திகதி (24-8-71)

## ஆட்சிமன்ற ஜனநாயகம்

சர்வதேச பாராளுமன்றச் சங்கத்தின் ஐம்பத்தொன்பதாவது மகாநாடு அடுத்தமாதம் முற்பகுதியில் பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டில் இலங்கையின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் தேற்றுப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்.

மக்களாட்சி அதாவது ஆட்சிமன்ற ஜனநாயகத்தை உலகில் முதலில் ஏற்படுத்திய பெருமைக்குரிய பிரஞ்சு நாட்டில் இந்த மகாநாடு நடைபெறுவது மிகப் பொருத்தம். ஆட்சிமன்ற ஜனநாயகத்தைக் கடைப்பிடித்துவரும் உலகநாடுகள் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றன.

ஆசியாவில் ஆட்சிமன்ற ஜனநாயகமுறை இன்னும் சோதனை நிலையிலேயே இருக்கிறது. சில நாடுகளில் இது தோல்வியடைந்திருக்கிறது. ஆட்சிமன்ற ஜனநாயகத்தைப் பின்பற்றிவரும் நாடுகள் பலபல சோதனைகளைச் சமாளிக்கவேண்டியிருக்கின்றன. இந்தச் சோதனைகளை யெல்லாம் கடந்து ஆட்சிமன்ற ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு ஜனநாயகத்தில் வெற்றி பெற்ற பெரிய அரசுகளின் ஆலோசனைகளும் மற்றைய நாடுகளின் அனுபவங்களும் உதவவேண்டும். இந்த மகாநாடுகள் இதற்கு நல்ல வாய்ப்பளிக்கும்.

ஆசியாவில் ஆட்சிமன்ற ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு பெரிய அரசுகளின் ஆலோசனை மட்டுமல்ல அவற்றின் உதவியும் ஒத்துழைப்பும் தேவை. ஆசியாவில் சில நாடுகளில் ஆட்சிமன்ற ஜனநாயகமுறை தோல்வியடைந்திருக்கிறது. இந்தநாடுகளில் மீண்டும் ஆட்சிமன்ற ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு பெரிய அரசுகளும் இதர நாடுகளும் முன்வந்து முயற்சிசெய்யவேண்டும். துரதிர்ஷ்டவசமாக ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே தாங்கள் வாழ்வதாகக் கூறிக்கொள்ளும் சில பெரிய அரசுகள் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு சர்வாதிகார ஆட்சி நடத்தும் நாடுகளுக்கு ஆயுத உதவியும் பொருளாதார உதவியும் அளித்து ஜனநாயகம் உயிர்பிழைக்காமல் செய்துவருகின்றன.

பெரிய வல்லரசுகளின் வஞ்சக நடத்தையை பாரிஸ் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டி ஆட்சிமன்ற ஜனநாயகம் உலகில் செழிப்புற்றுச் சிறக்க இயங்குவதற்கு வழிகாண முயற்சி செய்வது பயன்தரும்.

## டேபிள் டெனிஸ்

விளையாட்டுப் பந்தயங்களில் வெற்றிதோல்வி முக்கியமல்ல. நட்புறவைப் பலப்படுத்துவதே அதன் மேலான நோக்கம் என்பர். அந்தவகையில் பார்க்கையில் யாழ்ப்பாணத்திலே புதுசின வீரர்களுக்கும் இலங்கை கோஷ்டியினருக்கும் நடைபெற்ற 'டேபிள் டெனிஸ்' 'இரண்டாவது டெஸ்ட்' பந்தயம் மிக நல்ல பயன் அளித்துள்ளதென்றே கூறவேண்டும்.

பந்தயத்தில் புதுசின வீரர்கள் வெற்றிபெற்றதுடன் யாழ்ப்பாண பொதுமக்களின் மனதையும் கவர்ந்துவிட்டனரென்பது மிகையாகாது. இலங்கை கோஷ்டியைச் சேர்ந்த வீரர்களும், உலக சம்பியன்களை எதிர்த்து சில வெற்றிகளைப் பெறமுடிந்தது பெருமைக்கும் மகிழ்ச்சிக்குரியதாகும். இதற்காக நம் நாட்டு வீரர்களுக்கும் "சபாஷ்" கூறி மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இதில் ஒருகுறை யாழ்ப்பாண வீரர்களில் ஒருவராவது இப் பந்தயத்தில் சேர்க்கப்படாததுதான். யாழ்ப்பாணத்தில் இந்த விளையாட்டு அவ்வளவு பிரபலமாகவில்லையென்றும் சர்வதேச பந்தயமிடம் விளையாடக்கூடிய திறமையடைந்த வாலிபர் இங்கு இல்லையென்றும் சொல்லப்படலாம். ஆனால் தக்கசந்தர்ப்பமும் பயிற்சியும் அளிப்பின் இங்குள்ள நம் வாலிபர்களும் யாருக்கும் பின்வாங்க மாட்டார்கள். இலங்கையின் புகழை உலக அரங்கில் ஓங்கச் செய்து தேசியப்பணியாற்ற பல வாலிப வீரர்கள் இங்கு காத்திருக்கிறார்கள்.

எதற்கும் அரசாங்கத்தையே எதிர்பார்ப்பதில் பயனில்லை. 'டேபிள் டெனிஸ்' முதலிய விளையாட்டுக்களை இங்கும் வளர்த்து வாலிபர்களை ஊக்கப்படுத்தக்கூடிய வழிவகைகளைச் செய்ய செல்வந்தர்கள் ஆங்காங்கே முன்வரவேண்டும். புதுசினத்திலே இவ்வித விளையாட்டுகளுக்கு அரசாங்கம் எவ்வளவு உதவியும் மதிப்பும் அளிக்கிறதென்பதை விளக்கத் தேவையில்லை. அவ்வித நிலை இலங்கையிலும் சீக்கிரத்தில் ஏற்படக்கூடும். அதற்கிடையே கூடியவரை நம் சொந்த முயற்சிகளைச் செய்து விளையாட்டுகள் மூலம் நம் வாலிபர்களை ஊக்கப்படுத்துவது பலவகைகளிலும் விரும்பத்தக்கதாகும்.

## வித்தியாதிபதிகளுக்கு கல்வி அமைச்சின் உத்தரவு

கோட்டை திங்கள் மாவட்ட வித்தியாதிபதிகளும் பிரதம கல்வி அதிகாரிகளும் திறமையான பாடசாலைகளை மட்டும் சென்று பார்வையிடாது சகல பாடசாலைகளுக்கும் செல்லவேண்டும் நாட்டிலுள்ள சகல மாவட்ட கல்வி அதிபர்களுக்கும் பிரதம கல்வி அதிகாரிகளுக்கும் கல்வியமைச்சு மேற்கண்ட அறிவித்தலை அனுப்பியுள்ளது.

இந்த அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: மேற்படி அதிகாரிகள் தனியாகவோ அல்லது குழுவாகவோ எத்தனை பாடசாலைகளுக்குச் செல்ல முடியுமோ அத்தனை பாடசாலைகளுக்கும் சென்று பாடசாலைகளின் நிலைமைகளை நேரடியாகக் கவனிக்கவேண்டும் நல்ல திறமையான பாடசாலைகளுக்குச் செல்லும் பொழுது அப்பாடசாலைகளின் தரம் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது எவ்வாறு இந்தத் தரஉயர்வு ஏற்பட்டது

(2-ம் பக்கம் பார்க்க)

## "நிரந்தர நாடகமண்டபம் யாழ். நகருக்கு வேண்டும்"

### கருத்தரங்கில் உதவி அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"மேல்நாடுகளில் உள்ளதுபோன்று யாழ்ப்பாணத்திலும் ஒரு நிரந்தர நாடக மண்டபம் நிறுவப்படவேண்டும். அந்த மண்டபத்தில் நாடகம் மட்டுமே நடைபெறவேண்டும். நாடகக்கலை முன்னேறவேண்டுமானுல் இலவசமாக எந்த நாடகத்தையும் மேடையேற்றக்கூடாது"

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த நாடக கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு ரி முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்

திரு செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு முருகேசம்பிள்ளை மேலும் கூறியதாவது:

சினிமாத்துறையில் முன்னணியில் நிற்கும் லண்டன் மாநகரில் நாடகத்திற்கு நிரந்தரமான மண்டபம் இருக்கின்றது அங்கு தினசரி ஏதாவதொரு நாடகம் நடந்துகொண்டிருக்கிறது மக்கள் பெருந்திரளாகச் சென்றுகொண்டிருக்கிறார்கள் இக்க நிலை யாழ்ப்பாணத்திலும் ஏற்படவேண்டும்

வில்லியம் சேக்ஸ்பியர் காலத்திலும், பெர்னுர்ட்ஷோ காலத்திலும் நாடக மண்டபங்கள் நிரந்தரமாக இருந்துவந்தன நாடகத்தின் மூலமே அவர்கள் வாழ்க்கையின் ஊதியத்தை பெற்றுவந்தார்கள் இவர்கள் நடிகர்களாக இருந்த பின்னரே எழுத்தாளராக வந்தார்கள்

## மண்ணித்தலை செபஸ்தியார் உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் மூன்று மைல் தொலைவில் கடலில் அமைந்துள்ள சிறு தீவான மண்ணித்தலை புனித செபஸ்தியார் உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது இம்மாதம் 29ம் திகதி ஞாயிறன்று திருநாள் பாடற் பூசையுடனும் மாலை புனித தேர் உற்சவத்துடனும் விழா நிறைவு பெறும்.

யாழ்ப்பாணப் பகுதியின் பல பகுதிகளிலுமிருந்தும் உற்சவத்தில் மக்கள் கலந்துகொள்வர் அடியார்களின் வசதியை முன்னிட்டு இங்கு தற்காலிக பொலிஸ் சாவடி மற்றும் சுகாதார வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாஷையூர் கட்டளைக்குருவர் வண. பிதா ஜோன் சிங்கராயர் தலைமையில் ஆராதனைகள் நடைபெறும்.

## மோதிரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகத் திருவிழாக்காலத்தின்போது பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய இன்ஸ்பெக்டர் இராசையாவையும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் பாராட்டியிருக்கிறார்.

### ஒருவர் றிமாண்டில்

நல்லூர் திருவிழாவின்போது ஓர் இளம்பெண் மீது பலாத்காரம் உபயோகிக்க எத்தனித்ததாகக் கைதுசெய்யப்பட்ட ஒருவர் இரண்டுவாரம் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

நல்லை உற்சவத்தையொட்டி

## யாழ். மாநகரசபை நடத்திய சமய அறிவுப்போட்டி முடிவுகள்

குருநகர், திங்கள்

சமய அறிவுக்கான போட்டிகளை நடத்துவதால் சைவ மாணவர்களுக்குச் சமய அறிவையும் ஆர்வத்தையும் தூண்டுவதற்கு உதவியாக இருப்பதுடன் இப்படியான திருவிழாக் காலங்களில் வீண்வேடிக்கைகளில் எமது மக்கள் புலனைச் செலுத்தாமல் நல்வழிகளில் சிந்தனையைச் செலுத்துவதற்கு வழி செய்வதாயும் அமைகின்றது. நல்லூர் உற்சவத்தையொட்டி இந்தச் சமயப்போட்டியை நடத்த முன்வந்ததற்கு நகர மேயரையும் ஆணையாளரையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ்வாறு நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு யாழ் மாநகரசபையினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் சித்தி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்குவதற்காக நடத்தப்பட்ட விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய உதவிமேயர் திரு ஆ. துரைராசசிங்கம் தெரிவித்தார்.

ஆயிரத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்களிலும் சரியான விடைகளை எழுதியவர்களில் 10 பேரை இப்போட்டிக்கான குழு தெரிவு செய்தது. முதலாவது பரிசை கொக்குவில்தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி கு. சரோஜினிதேவியும் இரண்டாவது பரிசை யாழ்ப்பாணம் ஓடைத் தெருவைச் சேர்ந்த இ: குமாரசாமியும் மூன்றுவது பரிசை கோப்பாயைச் சேர்ந்த சி: பத்மநாதனும் பெற்றனர். இரா ஏழு ஆறு தம்பரிசில்களையும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த வ. சண்முகராஜா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச்சேர்ந்த க ஆதவன் யாழ்ப்பாணம் ஓட்டுமடம் வீதியைச் சேர்ந்த வி குமாரகுமாரன் கோப்பாயைச் சேர்ந்த செல்வி க கிரிசரமணி நாரந்தனையைச் சேர்ந்த செல்வி ந சந்திரா நயினுதீவைச் சேர்ந்த ந லக்ஸலிங்கம் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச்சேர்ந்த செல்வி அ கமலேஸ்வரி ஆகியோர் பெற்றனர். இதற்கான பரிசில்களை யாழ் மாநகர ஆணையாளர் ஏ மி சுந்தரம் வழங்கினுர்.

## இன்று ஞாயிறு மசோதாவிவாதம்

கொழும்பு, செவ்.

ஞாயிறு விடுமுறை மசோதா மீதான ஒத்திவைக்கப்பட்ட விவாதம் இன்று செனட்சபையில் நடைபெறவிருக்கிறது. 9-வது தினமாக இது இங்கு இன்று விவாதிக்கப்படுகிறது. (இ பி ஏ)

வெள்ளக்கொடுமை

## ஆயிரம்பேர் வீடிழப்பு

கோட்டை திங்கள்

இரத்தினபுரி, காலி, மாத்தறை, அவிசாவளை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள அபாயத்தினுல் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமானேர் தமது வீடுகளை இழந்து பொதுக் கட்டிடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனதாக சமூக சேவை அமைச்சு தெரிவித்தது.

இவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன விடாதமழையினுல் இப்பகுதியில் உள்ள அநேக இடங்கள் வெள்ளக்காடாகவே காட்சியளிக்கின்றன.

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் தம்பதிகளின் சஷ்டியப்த பூர்த்தி விழா பொன்னலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவிலில் நடைபெற்றது.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

26-8-71 முதல்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
(தினசரி 4 காட்சிகள்)
★ ஜெமினி கணேசன்,
★ கே. ஆர். விஜயா,
நிர்மலா, நாகேஷ்
நடித்த
சங்கமம்
(வர்ணப்படம்)